வேலூர் மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) (உதவிப்பதிவுத்துறைத்தலைவர் நிலை) அவர்களின்
செயல்முறைகள் முன்னிலை : திரு.மு.ராஜா M.Com.,M.Phil.,

மூ.மு.எண்:5220/ஆ2/2025 நாள்:07.11.2025

பொருள் : மதிப்பு நிர்ணயம்– குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகம் உள்ளி கிராமம் புல எண்கள்–89, 90/1 ல் பரப்பு ஏக்கர்–5.53 செண்டில் அமைக்கப்பட்டுள்ள "கோவிந்தசாமி நகர் பகுதி–I"மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு உத்தேச குடியிருப்பு மனைகளுக்கு தொழில் நுட்ப இசைவு அளிக்கப்பட்டது மதிப்பு நிர்ணயம் செய்து ஆணை

பார்வை : 1.சார்பதிவாளர், குடியாத்தம் ந.க.எண்:372/2025 நாள்:28.10.2025 நிலுவை ஆவண எண்.P50/2025 நாள்:25.10.2025 (பெறப்பட்ட நாள்:31.10.2025)
2. பதிவுத்துறைத் தலைவர் சுற்றறிக்கை எண்.1/2014 நாள்:27.01.2014

*****

ஆணை:

பொருளில் காணும் விவரம் தொடர்பாக பார்வை–1ல் காணும் சார்பதிவாளர் அவர்களின் அறிக்கையின்படி மனைப்பிரிவிற்கு மதிப்பு நிர்ணயம் செய்யும் பொருட்டு சொத்து விவரத்தில் விவரித்துள்ள புல இடம் 04.11.2025 அன்று என்னால் நேரில் பார்வையிடப்பட்டது. பிரஸ்தாப மனைப்பிரிவானது குடியாத்தம் டு மேல்பட்டி செல்லும் சாலையினை ஒட்டி அமைந்துள்ளது. கிழக்கில் விளைநிலம் மேற்கில் குடியாத்தம் டு மேல்பட்டி சாலை மற்றும் பெட்ரோல் பங்க் வடக்கில் தரிசு பூமியும் தெற்கில் மலைப்பகுதியும் காணப்படுகிறது. புலத்தணிக்கை மற்றும் விசாரணையின் அடிப்படையிலும், புல இடத்தின் அமைவிடத்தை பொறுத்தும், வில்லங்கப்பதிவு மதிப்புகள் மற்றும் வழிகாட்டி மதிப்புகளின் அடிப்படையிலும் உள்ளி கிராமம் புல எண்கள்–89, 90/1 பரப்பு ஏக்கர்–5.53 செண்டில் அமைக்கப்பட்டுள்ள "கோவிந்தசாமி நகர் பகுதி–I" மனைப்பிரிவுக்கு சதுரடி1–க்கு ரூ.250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) என மதிப்பு நிர்ணயம் குடியிருப்புப்பகுதி தரம்–I வகை–III (RC–I–III) என்ற புதிய வகைபாட்டில் பொறுத்தி ஆணையிடப்படுகிறது.

இம்மதிப்பு இம்மனைப்பிரிவுக்கு மட்டுமே பொருந்தும், மேலும் மனைப்பிரிவில் காணும் புலஎண்கள் புறம்போக்கு நிலம்/ அனாதீனம்/ வக்போர்டுவாரிய சொத்துக்கள்/ இந்து அறநிலையத்துறை சொத்து அல்ல என்பதையும் நீதிமன்றதடை, பதிவு சட்டப்பிரிவு 22(A)க்கு உட்பட்டதா எனவும் மற்றும் வேறு பாதகமான காரணிகள் இல்லை என்பதையும் உறுதி செய்துகொள்ள சார்பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

சார்பதிவாளர் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் ஆணை பிறப்பிக்கப்படுகிறது. சார்பதிவாளர் சமர்ப்பித்த அறிக்கையில் தவறுகளோ விடுதல்களோ இருப்பின் அதனால் ஏற்படும் இழப்புக்கு சார்பதிவாளரே முழு பொறுப்பாவார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மதிப்பு நிர்ணயத்திற்கு மேல்முறையீடு மனுதாரர் அளிக்கப்படாத நிலையினை உறுதி செய்து உள்ளி கிராமம் வழிகாட்டி பதிவேட்டில் புதிய வகைப்பாடு குறித்து உரிய குறிப்புகளை தவறாது மேற்கொண்டிடவும், இணையதளத்தில் உள்ளீடு செய்திடவும் சார்பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்)
(உபதுத நிலை) வேலூர்

07/11/2025

பெறுநர்:
சார்பதிவாளர்/குடியாத்தம்
நகல்:துணைப்பதிவுத்துறைத்தலைவர் அவர்கள்
(பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

நகல்:ஆ2 இருக்கைக்கு/ ஆவணதாரருக்கு